திரு. என். ஆர். தியாகராஜன் : தலைவரவர்களே, இந்த சீரணிப் படைக்கு எந்தவிதமான Rules and Regulations-ம் இல்லை என்று சொல்லப்படுகிறது. அது பற்றி விசாரித்தார்களா ? விசாரிக்கப்படுமா ? எப்போது விசாரிக்கப்படும் ?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : அதிலே பணியாற்ற வேண்டியவர்கள் "இன்னின்ன பணிகளைச் செய்வது என்ற கொள்கையை ஒப்புக்கொண்டிருக்கிறவர்கள்", சீரணிப் படையில் சேரலாம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. 10 தொண்டுகளில் அக்கறை கொண்டு, ஓய்வு நேரத்தை இதில் கழிக்க விரும்புகிறவர்கள், இதில் சேர்க்கப்பட்டு வருகிறார்கள் வேறு ஒன்றும் இதற்கு சட்டதிட்டமில்லை.

திரு. எம். எத்திராஜுலு : சீரணிப் படையில் சர்க்கார் உத்தியோகஸ்தர்கள், (Home Guards) போன்றவர்களைச் சேர்க்க ஏதாவது உத்தேசமிருக்கிறதா ?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : சீரணிப் படையில் எல்லா தரப்பினரும் கலந்து கொள்ளலாம் என்றுதான் குறிப்பிடப்பட்டு இருக்கிறது.

Death of a labourer in Thiruchirappalli Town.

*** 2'2 Q—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Chief Minister be pleased to state—**

(a) whether it is a fact that three Police constables joined together and beat to death one labourer of Tharana in October, 1967, wear the new over bridge in Thiruchirappalli and ran away, after throwing the body before a lor y;

(b) whether the lorry driver made a complaint to the veppur check-post. and

(c) the action taken there on ?

தொழிலாளி மரணம்.

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) திருச்சி, தாரணர் பகுதியில் வசிக்கும் ஒரு தொழிலாளியை, திருச்சி புதிய மேம்பாலத்தில் மூன்று போலீசார் சேர்ந்து அக்டோபர் (1967) மாதத்தில் அடித்துக்கொன்று லாரியின் முன் தூக்கி எறிந்துவிட்டு ஓடியதாகக் கூறப்படுவது உண்மையா ?

(ஆ) இதை லாரி டிரைவர் வேப்பூர் செக் போஸ்டில் புகார் செய்தாரா ?

(இ) இது பற்றி எடுத்த நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (on behalf of the Hon. the Chief M nister): (அ), (ஆ), and (இ) : காவற்றுறைத் தலைவரிடமிருந்து (Inspector-General of Police) கிடைக்கப்பெற்ற ஓர் அறிக்கையின் படி, மணி என்ற ஒரு நபர் 1967-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 14-ம் தேதியில் திருச்சி கோட்டை காவல் நிலையத்தைச் சேர்ந்த மூன்று காவலர்களால் அழைத்துச் செல்லப்பட்டு, அவர்களால் பலமாக அடிக்கப்பட்டு, அதன்பின் ஓடிக்கொண்டிருந்த லாரி முன்பாக அவர்களால் தள்ளப்பட்டதாகவும் லாரி அவர் மீது ஏறியதின் காரணமாக அவர் இறந்து போனார் என்பதாகவும், மணியின் உறவினர் சிலர் புகார் செய்திருக்கிறார்கள். உண்மை என்னவென்றறிய, திருச்சி கோட்டாட்சித் தலைவர், நடந்த சம்பவம் பற்றி விசாரணை நடத்தி வருகிறார்.

திரு. என். ஆர். தியாகராஜன் : தலைவரவர்களே, இது சம்பந்தமாக அந்த சந்தேகிக்கப்பட்ட போலீசார் மீது என்ன நடவடிக்கை எடுக்கப் பட்டது ? இல்லாவிட்டால் இனிமேலாவது என்ன நடவடிக்கை எடுக்கப் படும் ?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : ரெவின்யூ டிவிஷனல் ஆபீசர் அவர்கள் விசாரித்த வகையில், இரண்டு போலீஸ்காரர்கள் அந்த மணி என்பவருடன் இருந்தார்கள் என்று சாட்சிகள் சொன்ன காரண மாக உடனடியாக அவர்களை சஸ்பெண்ட் செய்து வைத்திருக்கிறார்கள். மாவட்ட ஆட்சித் தலைவர் இப்போது மேற்கொண்டு விசாரணை நடத்திக் கொண்டு வருகிறார்.

Workers of Ambattur Tube Investments Factory.

* 213 *Q*—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Chief Minister be pleased to state :—

(*a*) whether it is a fact that there was a clash between the workers of the Madras Ambattur Tube Investments Factory resulting in serious injuries to Desingh, Dhasarathan, and Venkatesan ;

(*b*) whether the police have initiated criminal proceedings against those who assawited them ;

(*c*) if not, the reason therefor ?

அம்பத்தூர் டியூப் இன்வெஸ்ட்மெண்டல் தொழிற்சாலை தொழிலாளர்கள்.

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :—

(அ) சென்னை அம்பத்தூர் டியூப் இன்வெஸ்ட்மெண்ட்ஸ் தொழிற் சாலையில் தொழிலாளருக்குள் மோதல் ஏற்பட்டு தேசிங், தசரதன், வெங்கடேசன் ஆகியோர் படுகாயமடைந்தனரா ?

(இ) இவர்களை தாக்கியவர்கள் மீது போலீசார் வழக்குத் தொடர்ந்துள்ளனரா ?

(உ) இல்லையென்றால், யாது காரணம் ?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : (on behalf of the Hon. the Chief Minister: (அ), (இ) ஆம். இந்த விஷயம் நீதி மன்றத்தில் இருக்கிறது.

(உ) வினாவிற்கு இடமில்லை.

திரு. என். ஆர். தியாகராஜன் : தொழிற்சாலைகளில் இத்தகைய அடிதடி சம்பவங்கள் நடக்காமல் இருக்க முன் ஏற்பாடு ஏதாவது அரசாங்கம் செய்யுமா ? அடிக்கடி இத்தகைய சம்பவங்கள் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றன. அதைத் தடுக்க என்ன ஏற்பாடு செய்யப்பட்டிருக் கிறது ?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : தொழிற்சாலை தகராறுகள் ஏற்படாமல் தடுப்பதற்கு ஆங்காங்கு வெல்பேர் ஆபீசர்கள், போன்ற பல்வேறுபட்ட அதிகாரிகள் இருக்கிறார்கள். கலவரம் ஏற்படக் கூடிய இடங்களில், கோவை போன்ற இடங்களில், போலீஸ் பந்தோபஸ்து செய்யப்பட்டிருக்கிறது. இவைகளைத் தடுக்க என்னென்ன முறைகள் மேற் கொள்ள வேண்டுமோ அவைகள் செய்யப்பட்டிருக்கின்றன. எதிர் காலத் தில் என்னென்ன முறைகளை மேற்கொள்ளவேண்டுமோ, இந்த நிகழ்ச்சி களைத் தடுப்பதற்கு, அவைகள் மேற்கொள்ளப்படும்.